2026 தேர்தலிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆட்சி அமைவது உறுதி!

பல்லாவரம் தொகுதியில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிய முதல்வருக்கு நன்றி!

சட்டப்பேரவையில் பல்லாவரம் இ.கருணாநிதி பேச்சு!

சென்னை, ஏப்.27– சட்டப்பேரவையில் சட்ட மன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித்துறை மற்றும் சுற்றுச்சூழல், ஆதிதிராவிடர் மானியக் கோரிக்கை விவாதத்தில் பல்லாவரம் தொகுதி உறுப்பினர் இ.கருணாநிதி பேசுகையில், 2026–லும் திராவிட மாடல் ஆட்சியே முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமையும் என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் சட்ட மன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித்துறை, சுற்றுச்சூழல் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை மானியக் கோரிக்கையில் பல்லாவரம் இ.கருணாநிதி பேசியதாவது:–

பகுத்தறிவு தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“எங்கள் வாழ்வும், எங்கள் வளமும், மங்காத தமிழென்று சங்கே முழங்கு”

என்றும்,

“செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!

செயலினை மூச்சினை உனக்களித்தேனே!

நைந்தாய் எனில் நைந்துபோகும் என் வாழ்வு”

என்று பாடியே பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் வரிகளுக்கு உயிரூட்டுகின்ற வகையில், மக்களாட்சி நடத்தும், மக்களின் முதல்வர், திராவிட இயக்கத்தின் தலைவர் முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.

பூட்டிய இரும்புக்கூட்டின்கதவுதிறக்கப்பட்டது. சிறுத்தையே வெளியே வா! என்று இளைஞர் பட்டாள சிங்க நிகர் தீரர்களை வழிநடத்த புறப்பட்ட புலிப்போத்தே, எங்கள் இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவை முன்னவர் அவர்களுக்கும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் டி.ஆர். பாலு அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், சட்டபேரவை கொறடா அவர்களுக்கும் மற்றும் துணைத் தலைவர் அவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்று பிரதமர் மோடி பேசியது என்ன?

நான் நிதியைப் பற்றி நிச்சயமாக இந்த பகுதியிலே கொடுத்திருக்கின்ற மானிய கோரிக்கையிலே பேசியாக வேண்டும். நம்முடைய முதல்வர் அவர்கள் நாங்கள் நிதி கேட்பது மக்களின் உரிமை, நான் அழுது புலம்புபவனும் அல்ல, யார் காலிலும் விழுபவனும் அல்ல, ஒன்றிய அரசிடம் கையேந்தி நிற்க, மாநிலங்கள் என்ன பிச்சைக்காரர்களா, என்று குஜராத் மாநிலத்தின் முதல்வராக அன்றையதினம் இருந்த பிரதமர் மோடி அவர்கள் பேசியிருந்தார்கள். அதை இன்று நினைவுப்படுத்த உரிமைக் குரல் எழுப்பி வருபவர் நம்முடைய முதல்வர் அவர்கள். தமிழையும் தமிழர்களையும், தமிழ் இளைஞர்களையும் இழிவுப்படுத்தும் ஒன்றிய அரசு.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒரிசாவில் பிரச்சாரம் செய்த பிரதமர் அவர்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர், வெளிநாட்டுத் துறை அமைச்சர் ஆகியோர் ஒடிசா பூரி ஜெகநாதர் கோயிலில் சாவி திருட்டுபோனது பற்றித் தமிழர்களுக்கு திருட்டுப்பட்டம் கொடுத்துப் பேசினார்கள். தமிழர்கள் நாகரிகம் இல்லாதவர்கள் என நாடாளுமன்றத்திலேயே ஒன்றிய அமைச்சர் தர்மேந்திரபிரதான் அவர்கள் பேசியிருக்கின்றார்கள். இலங்கை சென்று திரும்பிய பாரத பிரதமர் அவர்கள் இராமநாதபுரம், இராமேசுவரம் வருகின்ற போது தமிழர்களைப் பார்த்து சகோதர சகோதர்களே என்றும் நான் தமிழ்நாடு வருகிறேன் என்றும் அன்போடு அழைக்கிறார்.

தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய நிதிநிலை தராதவர்கள்!

ஆனால், தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய ரூ. 37,000 கோடி நிவாரண நிதியை இதுவரை ஒன்றிய அரசு தர மறுத்திருக்கிறது. விவசாயிகள் வரி செலுத்துகின்றனர் ஆனால், நாட்டைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிற தொழிலதிபர்களுக்கு கடன் தள்ளுபடி செய்யப்படுகிறது. 70 கோடி மக்களிடம் இருக்க வேண்டிய பணம் இன்று 22 பணக்காரர்களிடம் இருக்கிறது என்று சொன்னால் அதை காங்கிரஸினுடைய நாடாளுமன்றத்திலே ராகுல் காந்தி அவர்கள் உரையாற்றிருக்கிறார். சமக்ரா அபியான் திட்டம் தமிழ்நாடு கல்வித் திட்டத்திற்கு ரூ. 2,152 கோடியைத் தரவில்லை. அதேநேரத்தில் அதானி அம்பானிகளுக்கு மக்களின் வரிப் பணத்தில் ரூ. 25 இலட்சம் கோடி தள்ளுபடி செய்துள்ளது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் பல்வேறு வளர்ச்சிகளைப் பெற்றிருக்கின்றது. சாதனைப் படைத்திருக்கின்றது. 2024-2025 ஆம் ஆண்டில் 9.69 சதவிகிதம் வளர்ச்சி வீதத்துடன் இந்திய அளவில் முதலிடம். கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்த அதிக பட்ச வளர்ச்சி, குவியும் முதலீடுகள், பெருகும் வேலைவாய்ப்புகள் 2021-2025 வரை புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 895, முதலீடுகள் ரூ.10,14,368, கோடி, வேலைவாய்ப்புகள் 32,04,895 பணிகள், சீரான வளர்ச்சி 2021-2022 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 8 சதவிகிதத்திற்கும் அதிகமான வளர்ச்சி வீதத்துடன் தமிழ்நாடு நிலையான

பொருளாதாரத்தை முன்னேற்றியுள்ளது.

எதிர்கால இலக்கு, நீடித்த வளர்ச்சி மற்றும் அதிகரிக்கும் முதலீடுகள் மூலம் 2032-2033 ஆம் ஆண்டில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற நிலையினை தமிழ்நாடு அடையும். மூத்த பொருளாதார வல்லுநர்களான சி. ரங்கநாதன், கே. ஆர். சண்முகம் ஆகியோர் தற்போது தமிழ்நாடு எட்டியுள்ள பொருளாதார வளர்ச்சி 9.69 சதவிகிதம் என்கிறார்கள்.

இந்த 9 சதவிகிதத்திற்கு மேலான அளவுகளைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொண்டாலே, வரும் 2023-2033 ஆண்டுக்குள் ஒரு மில்லியன் அமெரிக்கா டாலர் பொருளாதாரத்தை தமிழ்நாடு அடையும் என்று கணித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் வளர்ச்சி சர்வதேச நாடுகளுக்கு இணையானது. இந்தியாவின் வளர்ச்சியைத் தாண்டி உலக நாடுகளுடன் போட்டியில் உள்ளது. கல்வி, மருத்துவம், தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி கட்டமைப்பு என நம் முதல்வர் அவர்கள் எடுத்துவரும் இராணுவ முயற்சியால் உலக அளவில் இமயமாக நிமிர்ந்து நிற்கிறது.

தேசிய ஒருமைப்பாட்டுக் குழு கூட்டப்படவில்லை!

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பன்மாநில குழு மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக் குழு, ஒன்றிய அரசு கூட்ட வேண்டிய பன் மாநிலக் குழு, தென் மண்டலக்குழு, தேசிய ஒருமைப் பாட்டுக் குழு ஆகியவை இதுவரை கூட்டப்படவில்லை. இதனால்தான் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் நதிநீர்ப் பிரச்சினை, மொழிப் பிரச்சினை, மாநிலப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, மத நல்லிணக்க பிரச்சினை, நிதி தொடர்பான பிரச்சினை, GST போன்ற வரிப் பிரச்சினை, சிறுப்பான்மை மக்கள் தொடர்பான பிரச்சினைகள் பற்றி பேசிட வாய்ப்பு வழங்கப்படவில்லை. இவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்பட ஒன்றிய அரசு இதுவரை முன்வரவில்லை என்பதை தங்கள்மூலம் இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால்தான் மாநிலங்களுக்கு உரிமை கேட்டு மாநில சுயாட்சி முழக்கத்தை நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எழுப்பியுள்ளார் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மீனவர்களுக்கு பல்வேறு திட்டங்கள்!

முதல்வர் அவர்கள், விதி 110-ன்கீழ் கடந்த சட்டப் பேரவைக் கூட்டத்தில் மீனவர்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்தார்கள். நம்முடைய முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் தொகுதி மேம்பாட்டு நிதியைக் குறிப்பிட்டுப் பேசினார்கள். தொகுதி மேம்பாட்டு நிதி என்பது ரூ. 3 கோடி. இந்த திட்டத்தை முதலில் தமிழ்நாட்டுக்கு சட்டப் பேரவையில் அறிவித்தவர் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தொகுதி மேம்பாட்டு நிதியும் ஜி.எஸ்.டி. வரி!

அதேநேரத்தில் இந்த ரூ. 3 கோடி திட்டம், அதிலே இந்திய ஒன்றிய அரசு 18 சதவிகிதம் GST வரியைப் பிடித்திருக்கிறார்கள் என்று சொன்னால், கிட்டத்தட்ட ரூ. 3 கோடியில் ரூ. 54 இலட்சம் வரியாகப் பிடித்தால் அந்த தொகுதிக்கு எப்படி பலன்கள் மற்றும் பணிகள் நடைபெறும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்தியா என்பது சட்டத்தின் ஆட்சி. ஆட்சிமன்றம், சட்டமன்றம், நீதிமன்றம் ஆகிய 3 பிரிவுகளைக் கொண்டது இந்திய அரசமைப்புச் சட்டம். பா.ஜ.க. எம்.பி. மற்றும் தலைவர்கள் உச்ச நீதிமன்றத் தீர்ப்பைக் கொச்சைப்படுத்திடும் விதத்தில் பேசியிருப்பது தவறானது. நாட்டிலேயே உயர் பொறுப்பு வகிப்பவர் தவறு செய்தாலும், அதனைத் தட்டிக் கேட்கும் உரிமை அரசமைப்புச் சட்டத்திற்குத்தான் உள்ளது. இந்திய குடியரசு துணைத் தலைவர் மற்றும் மாநிலங்களவைத் தலைவர் என்ற பெரிய பொறுப்பில் இருப்பவர் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை கடும் விமர்சனம் செய்துள்ளது என்பது வருத்தத்திற்குரிய செய்தியாகும். இது அரசமைப்புச் சட்ட கூட்டாட்சி மற்றும் மாநில உரிமைகளுக்கு எதிரான கருத்தாகும்.

உச்சநீதிமன்றத்தின் அதிரடி தீர்ப்பு!

மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட 10 மசோதாக்களின்மீது நீண்ட நாட்களாக முடிவெடுக்காமல் இருந்துவிட்டு, பிறகு அவற்றை ஜனாதிபதியின் பரிசீலனைக்காக அனுப்பி வைத்தார் ஆளுநர் ஆர்.என். ரவி அவர்கள். உச்ச நீதிமன்றத்தில் நம் முதல்வர் அவர்களின் முயற்சியால், தமிழக அரசு சார்பாக மனு தாக்கல் செய்யப்பட்டதால், 10 மசோதாக்களை கவர்னர் கிடப்பில் போட்டது சட்டப்படி தவறு என்றும், பல்கலைக்கழகங்களின் வேந்தர் அதிகாரம் இனி முதல்வர் வசம்தான் செல்லும் என்றும் முக்கிய வரலாற்றுத் தீர்ப்பை வழங்கியுள்ளது உச்ச நீதிமன்றம். (மணியடிக்கப்பெற்றது)

இதனால், அனைத்து மாநிலங்களின் ஆளுநர்களும் அரசமைப்புச் சட்டத்தின்படிதான் இயங்க முடியும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை அரசின் முடிவுகள், தீர்மானங்கள், சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும் மசோதாக்கள் போன்றவற்றிற்கு ஆளுநரால் இசைவு அளிக்கப்பட வேண்டும். ஆளுநருக்கு என்று தனி அதிகாரம் இல்லை எனவும், அமைச்சரவைக் குழுவின் ஆலோசனை மற்றும் அறிவுரைகளுக்கு உட்பட்டுத்தான் அவரால் செயல்பட முடியும் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இத்தீர்ப்பு முதல்வர் தளபதி அவர்கள் எடுத்த முயற்சியின் பயனாகக் கிடைத்த மாநிலங்கள் உரிமைகள் குறித்த வரலாற்று முடிவாகும். வளர்ச்சியான மாநிலங்களை, வலிமையான இந்தியாவை உருவாக்கும் வகையில் இத்தீர்ப்பு அமைந்துள்ளது.

மாநில சுயாட்சி முழக்கம்!

ஒன்றிய அரசின் சார்பில் 1983 ஆம் ஆண்டில் சர்க்காரியா ஆணையம், 2007 ஆம் ஆண்டில் நீதிபதி பூஞ்சி ஆணையம் ஆகியவை அமைக்கப்பட்டன. 1971 ஆம் ஆண்டில் கலைஞர் அவர்கள் நீதிபதி இராஜமன்னார் தலைமையில் குழு ஏற்படுத்தி, மாநில சுயாட்சி முழக்கத்தை எழுப்பினார்.

தமிழ்நாடு அரசு (எதிர்) ஆளுநர் வழக்கில், உச்ச நீதிமன்ற நீதிபதி பர்திவாலா அவர்கள், ‘ஓர் அரசமைப்புச் சட்டம் எவ்வளவு நல்லதாக இருந்தாலும், அதனை செயல்படுத்துபவர்கள் நல்லவர்களாக இல்லாவிட்டால், அது மோசமானதாகவே இருக்கும்’ என்று டாக்டர் அம்பேத்கர் அவர்கள் கூறிய கூற்றை மேற்கோள் காட்டி தீர்ப்பை வழங்கி நிறைவு செய்துள்ளார். சர்வாதிகார சக்திகளுக்கு எதிராக தீர்ப்பு வழங்கிய அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

‘ஆட்டுக்குத் தாடியும், நாட்டுக்கு ஆளுநரும் தேவையில்லை’ என்று அண்ணா அவர்கள் ஒரு வரியைக் கூறினார்கள். அதுதான் நிரந்தரமாக அமையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப் பட்டிருக்கின்றேன்.

கல்வியில் மிகப்பெரிய புரட்சி!

கல்வியில் மிகப் பெரிய புரட்சி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கல்விக்கான 3,586 கோடி ரூபாய் நிதியில், மாநில அரசுக்கு வழங்க வேண்டிய 60 சதவிகித நிதியான 2,152 கோடி ரூபாயை ஒதுக்க ஒன்றிய அரசு மறுப்பு தெரிவித்து வருகிறது.

பல்லாவரம் தொகுதியில் 10 பிரச்சினைகளுக்கு தீர்வு!

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, பல்லாவரம் தொகுதியில் 10 பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, பணிகள் நடைபெற்று படிப்படியாக முடிவடைந்து வருகின்றன. மேலும், பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

வடநெம்மேலி கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் என்பது மிகப் பெரிய அளவில் 400 MLD குடிநீரில் 40 MLD குடிநீரை பல்லாவரம் மற்றும் தாம்பரம் தொகுதிகளுக்கு வழங்கப்படவுள்ளது. (மணியடிக்கப்பெற்றது)

பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்த தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, 2026-ல் நம்முடைய முதல்வர் அவர்களே மீண்டும் முதல்வராவார் என்பதில் எந்த வித மாற்றமுமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) யார் நினைத்தாலும் ஆட்சியை மாற்ற முடியாது. சங்கே முழங்கு என்று நாங்கள் முழங்குவோம். (மணியடிக்கப்பெற்றது) உயிரைக் கொடுத்தேனும் இந்த இயக்கத்தைப் பாதுகாப்போம். நாம்தான் ஆட்சியமைப்போம் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

பல்லாவரம் தொகுதி, தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் குரோம்பேட்டை பகுதிகளில் பாதாளச் சாக்கடை திட்ட குழாய்களை புதிதாக அமைத்துத் தர வேண்டும்.

பல்லாவரம் மற்றும் தாம்பரம் வட்டாட்சியர்கள் மூலமாக உரிய அரசு புறம்போக்கு இடத்தைத் தேர்வு செய்து, தாம்பரம் மாநகராட்சியில் குப்பை கொட்டும் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வுகாண வேண்டும்.

பல்லாவரம் தொகுதி, பல்லாவரம் புதிய மேம்பாலத்திற்கு மறைமலை அடிகளார் பெயரை சூட்ட வேண்டும்.

இவ்வாறு பல்லாவரம் இ.கருணாநிதி பேசினார்.

இரா.பாலன் தலைமை! ஐட்ரீம் இரா.மூர்த்தி, எம்.எல்.ஏ. வ.பெ.சுரேஷ் முன்னிலை! இராயபுரம்

48வது வட்டக் கழகம் சார்பில் தண்ணீர் பந்தல்: ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்!

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. - ந.மனோகரன் - டாக்டர் அ.சுபேர்கான் பங்கேற்பு!

சென்னை, ஏப்.27- சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் மேற்கு பகுதி, 48வது வட்ட கிளை கழகம் சார்பில் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தண்ணீர் பந்தல் திறப்புவிழா இன்று (27.04.2025 ஞாயிற்றுகிழமை) காலை 10 மணியளவில் இராமனுஜ ஐயர் தெரு சங்கீதா பார்ட்டி ஹால் அருகில்) நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்குக வட்டச் செயலாளர் இரா. பாலன் தலைமை வகிக்கிறார்.

கு.ரமேஷ். இரா.பொன்முடி, கோ.நித்தி யானந்தம், ந.மணிமாறன், என்.ஹயாத் பாஷா, என்.சிவகுமார், பல்சர் பி.பாலாஜி, டபுள்யூ. எஸ்.ரவிச்சந்திரன், பாபா ஜி.சீனி வாசன், சி.சின்ன ராஜ், கே.குணசேகரன், கு.எல்லன், எஸ்.ஜானகிராமன், ராஜி, குமார், கோபி, இ.துரை, இ.குணா, எல். ராஜா, எம்.மோகன், கே.சிவா, ஆர்.விஜி, ஜி.சுரேஷ், டி.ரகுபதி, எஸ். சதிஷ், எச்.ரிஸ்வான், எச். தாவூத்பாஷா, இ.மாரி, எஸ்.சேகர், பி.வி.சரத், கே. மனோஜ்குமார், ச.கார்த்திகேயன், டிபன் ஆர்.செல்வம், சி.மாதவன், பி.செல்வம், ஆர்.எஸ்.ராஜசேகர், எஸ்.லோகேஷ், கே. பாலாஜி, ஜி.விநாயகம், பி. ஆமோஷ், மார்க்கெட் டி.ஏழுமலை, முருகன், பி.பிரவீன், எம்.பன்னீர் செல்வம், வி.ஹரி கிருஷ்ணன், ந.கோபி, சி.கார்த்திகேயன், கோ.இளையராஜா, வேலு, ஜி.கணேசன், எம். கந்தா, ஜி.சந்தானம், அஜித் ஆகியோர் வேற்புரையாற்றுகின்றனர்.

ஐட்ரீம் இரா.மூர்த்தி, எம்.எல்.ஏ., பகுதி செயலாளர்கள் வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார் மற்றும் வி.விஜயலஷ்மி விஜயகுமார், எஸ்.ரமேஷ், ரெயின்போ என்.விஜயகுமார், எம்.கே.இஸ்மாயில், எஸ்.திரு ஞானம், இ.மதன், வி.மலையம்மாள், எஸ்.யுவராஜ், ந.குமார், எம்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர். பி.முருகன், பாலாலட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன், என்.வேதா, ஆர்.இளையராஜா, வி.சுந்தரி, க.சாமுண்டீஸ்வரி, ந.சூர்யா, எம். கவிதா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தண்ணீர் பந்தலை சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ., திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., தா.இளையஅருணா, ந.மனோகரன், டாக்டர் அ.சுபேர்கான், பி.டி.பாண்டிச்செல்வம், என்.மருதுகணேஷ், இரா.வெற்றிவீரன், மு.கோபி, க.நாகம்மை, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி. தயாளன், கி.ராஜேந்திரன், நா.சண்முகம், வே. சிவக்குமார், கீதாசுரேஷ், பா. வேளாங்கண்ண, ஆர். வி.லட்சுமி வேலு, பி.சோமசுந்தரமூர்த்தி, வயோலா கே.மதன், ஆர்.பொன்இளவரசன், எம்.தீனதயாளன், லியோ டி.சுரேஷ்; கார்த்திக் செங்குட்டுவன், பி.செந்தில் குமார், வெ.சு.சத்தியநாராயணன், ஏ.டி.மணி, ஏ. ரமேஷ் பாபு, க.கோவிந்த சாமி, ஜெ.காணிக்கைநாதன், த.ஜெயபாலன், பி.சேக,ர் கு.சுந்தர், லோ.மோகன், பி. ஜெயலட்சுமி, நா.கஜேந்திரன், ஜி.எஸ்.முருகன், க. கலைச்செல்வன், ஜி.சதீஷ்குமார், ஆர்.வி.கணேஷ், என். கிருஷ்ணன், க.கோவிந்தராஜ், பி.கண்ணன், எம். பாலாஜி, ஆர்.டி. ஜெய்சங்கர், எஸ்.முகம்மது, மொய்தீன், ஏ.அன்வர், எம்.பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட கழகத்தினர் பலர் பங்கேற்கின்றனர்.

எஸ்.தங்கவாசுகி, ஏ.சிதம்பரம், ஆர்.கோகுல் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டை 48 வது வட்ட தி.மு.க செய்துள்ளது.

கோவை மாவட்டம், சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி, 27 வது வார்டு பீளமேடு ரங்கம்மாள் கோவில் வீதியில் மாமன்ற உறுப்பினர் அம்பிகா தனபால் ஏற்பாட்டில் வார்டு பொது நிதி ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர், மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் துவக்கி வைத்தார். இதில் பீளமேடு பகுதி செயலாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன், மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.தனபால், 27 வது வார்டு துணைச் செயலாளர் செந்தில்குமார், மாநகர் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் லோகேஸ்வரி, மாவட்டப் பிரதிநிதி பூ.வெ.துரைசாமி, வட்டக் கழகப் பிரதிநிதிகள் பூவை சுரேஷ், ரமேஷ் குமார், வேலுச்சாமி, கிருஷ்ணமூர்த்தி, கங்குவார் சீனு, மில் ரவி, பொருளாளர் அங்கமுத்து, இளைஞர் அணி ஐயப்பன், மகளிர் அணி அன்பரசி, திலகவதி, விஜயா, தேவி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

காரம்பாக்கம் க.கணபதி – பி.டி.பாண்டிசெல்வம் பங்கேற்பு!

மதுரவாயல் தெற்கு பகுதி 149வது வட்ட பாக நிலை உறுப்பினர்கள் கூட்டம்!

வட்டக் கழகச் செயலாளர் த.ரமேஷ் அறிக்கை!

சென்னை, ஏப். 27- சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 149வது வட்ட தி.மு.க. சார்பில் பாக நிலை

உறுப்பினர்கள் (BLC) கூட்டம் இன்று (27.4.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியளவில் வளசரவாக்கம், தேவி கருமாரியம்மன் நகரில் உள்ள இந்திராஜோதி திருமண மண்டபத் தில் நடக்கின்றது என்று வட்டக் கழக செயலாளர் த.ரமேஷ் அறிக் கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதல்வரின் ஆணைக்கிணங்கவும், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனையின்படியும் பாக நிலை உறுப்பினர்கள் (BLC) கூட்டம் இன்று (27.4.2025 -ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியளவில் வளசரவாக்கம், தேவி கருமாரியம்மன் நகரில் உள்ள இந்திரா ஜோதி திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம் பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ. முன்னிலையில், மாநில வர்த்தகர் அணி துணை அமைப்பாளர், மதுரவாயல் தொகுதி பொறுப்பாளர் பி.டி.பாண்டி செல்வம் சிறப்புரை ஆற்ற உள்ளார். மதுரவாயல் தெற்கு பகுதி துணைச் செயலாளர், மேனாள் நகர மன்றத் தலைவர் வே.மதியழகன், 149வது வார்டு மாமன்ற உறுப்பினர், பொது சுகாதார நிலைக்குழு உறுப்பினர் செல்விரமேஷ் எம்.சி. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

‘மேலும் இந்நிகழ்ச்சியில் எம்.கிருஷ்ணமூர்த்தி, ஆர். சிவ லிங்கம், ஆர். சுரேஷ்பாபு, எஸ். ஆறுமுகம், எம்.குமார், திருமதி. குப்பு ராஜேந்திரன், பி.எஸ்.துரைசாமி, எம். முரளி, ஆர்.வினோத், கே. ஜெகதீசன், கே.முத்து ராமன், எஸ்.அமுல்ராஜ், கே.சரவணன், எம்.ஏ.வி. சீனிவாசன், எம்.ஏ.வீரராகவன், கே.ஜி.ஜெய வேல், எம்.கே.தணிகாசலம், எஸ். ரவி, சி.பாலமுருகன், பி. சேகர், எம்.கலாநிதி, ஆர். சந்திர குமார், ஜி. கிருஷ்ணமூர்த்தி, ஏ.கணேசன், ஆர்.எம். பழனி யப்பன், கே.ஆனந்த் கார்த்திக், புலவர் கருப்பையா, என். ராஜா, எஸ்.கார்த்திக், என். கிருஷ்ணன் இ.பவானி, எஸ்.பரத், எஸ்.பி.புஷ்பராஜ், த.மோகன்ராஜ், த.சித்ரா தங்கராஜ், எஸ். சுந்தர்ராஜன், வி. ராஜேந்திரன், எஸ்.சுரேஷ் மோசஸ், எம்.அமுல்ராஜ், த.மோகனவேல், வி.டி. அரசு, பி.பொன்முத்து ரமேஷ், சி.சிவராம கிருஷ்ணன், வி. ஹேமந்த்குமார், எஸ்.குகாகார்த்திக், கே. பிரதாபன், எம்.சின்னா, என்.ராஜா, ஜே.அமுல் ராஜ், எஸ்.சத்யநாராயணன், ஆர்.விஸ்வநாதன், என். உடையப்பன், என். முருகேசன், பி. கிருஷ்ணன், பி.ராமஜெயம், ஜி.இ. சரவணன், வி.கார்த்திக் சத்தியநாராயணன், ஆர்.ஹரி, பி.செல்வகுமாரி, சுஜாதாநரசிம்மன், என்.கீதா, கிருஷ்டி, ஜெயந்தி, ஆர்.யாமினி மற்றும் கழகத்தின் மாவட்ட, பகுதி, வட்டத்திற்கு உட்பட்ட நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், மகளிரணி அமைப் பாளர்கள், துணை அமைப்பாளர் கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றார்கள்.

இந்நிகழ்ச்சியில் இறுதியாக 149வது வட்ட பகுதி பிரதிநிதி எம். முரளி நன்றியுரை ஆற்றுகிறார்.

இவ்வாறு 149வது வட்டக் கழக செயலாளர் த. ரமேஷ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள கொங்கு சமுதாயக் கூடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் இரா.நடன சபாபதி தலைமை தாங்கினார். நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், பரமத்தி வேலூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி கூட்டத்தின் நோக்கம் குறித்து விளக்கிப் பேசினார். உன் கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.